உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# சைவம்.

மலர் 4. | காலயுத்தி௵ புரட்டாசி௴. 1918௵ செப்டம்பர்௴ | இதழ் 9

### திருஞான சம்பந்தமூர்த்திநாயனர் துதி.

பரசமய கோளரியைப் பாலறுவா யனைப்பூம் பழனஞ் சூழ்ந்த
சிரபுரத்துத் திருஞான சம்பந்தப் பெருமானைத் தேய மெல்லாங்
குரவையிடத் தமிழ்வேதம் விரித்தருளுங் கவுணியர்தங் குலதீ பத்தை
விரவியெமை யாளுடைய வென்றிமழ விளங்களிற்றை விரும்பி வாழ்வாம்.

---

## சிவஞான போதம்.

### ஆறுஞ் சூத்திரம்.

(172-வது பக்கத் தொடர்ச்சி.)

### முதலதிகரணம்.

உணருரு வசத்தெனி னுணரா தின்மையின்.

(இ-ள்.) பதிப்பொருள் அளவைகளால் அறியப்படும் இயல்பையுடையது எனில் அது அசத்துப்பொருளாம். எதனாலும் அறியப்படாதது எனின் அது சூனியப் பொருளாம். (ஆதலினால்.)

இதில் 1-வது—தன்னாற் கூறப்படும் பொருள்:—

உயிரறிவினாலே யறியப்பட்டன வெல்லாம் அழியும். (அஃதாவது அசத்தாம்.)

2-வது—ஐயப்பாடு—முதல்வன் அறியப்படும் பொருளோ, அறியப்படாதபொருளோ.

3-வது—பிறர் கூறும் பக்கம்—பிரபஞ்சம் அறியப்படுவது போல் முதல்வனும் அறியப்படும் பொருளே. (இது நையாயிகர் பக்கம்.)

எல்லாப் பொருளுஞ் சத்தாகலின் அளந்தறிபொருளுஞ் சத்தே. (இது சாங்கியர் பக்கம்.)

4-வது—மறுத்துரைக்குஞ் சித்தாந்தத்துணிபு—

முதல்வன் பிரபஞ்சம்போல் அறியப்படும் பொருளாயின், முதல்வனும் பிரபஞ்சம்போல் அசத்தாவான். (அசத்து = அழியும் பொருள்.) ஆதலால் முதல்வன் அறியப்படும் பொருளன்று. (இது நையாயிகரை மறுத்தது.)

சற்காரியவாதம்பற்றி எல்லாப்பொருள்களுஞ் சத்தேயாமெனினுஞ் பிரபஞ்சமானது மாயையின் காரியமாய், தோன்றிநின்றழிதல்பற்றி அசத்தெனப்படும். (இது சாங்கியரை மறுத்தது.)

5-வது இயைபு—உதாரண வெண்பா.

அசத்தறியாய் கேணீ யறிவறிந்த வெல்லா
மசத்தாகு மெய்கண்டா னாயின்—அசத்தலாய்
நீரி லெழுத்து நிகழ்கனவும் பேய்த்தேரு
மோரினவை யின்றாமா றொப்பு.

(இ-ள்.) அசத்து அறியாய் நீகேள் = அசத்தின் இயல்பை யறியாத மடவோனே, யாம்கூறும் விடையை நீ மனம் பற்றிக் கேட்பாயாக—மெய்கண்டான் ஆயின் = சத்தின் இயல்பை யறிந்தவன் ஆராய்ந்தானாயின்— அறிவு அறிந்த எல்லாம் அசத்து ஆகும் = அறிவினாலறியப்பட்டன வெல்லாம் அசத்தேயாம். அசத்து அலாய் = அசற்காரியவாதியல்லாத அறிவுடையோனே—அவை இன்று ஆம் ஆறு ஒப்பு ஓரின் = அங்ஙனம் தோன்றி மறைவனவாய பிரபஞ்சம் அசத்தாமாற்றிற்கு உவமை யாராயின்—நிகழ் நீரில் எழுத்தும் கனவும் பேய்த்தேரும் = நிகழாநின்ற நீர்மேலெழுத்தும் கனவிற் காட்சியும் பேய்த்தேருமாம். (எ-று.)

இதனால், "அசத்தறியாய்" என்று நையாயிகரையும், "அசத்து அலாய்" என்று சாங்கியரையும் நோக்கி அவ்விருவர் மதங்களும் மறுக்கப்பட்டன. நையாயிகனை நோக்கி நீ சத்து அசத்து

என்பவற்றின் இலக்கணங்களை யறிந்தாயாயின் இவ்வாறு பிணங்காய்; அறியாமையாற் பிணங்குகின்றாய் என்பார் "அசத்தறியாய்" என்றனர். திருஞானசம்பந்தப்பெருமானர்

ஆட்பால வர்க்கருளும் வண்ணமு மாதிமாண்புங்
கேட்பான்புகி லளவில்லை கிளக்க வேண்டா
கோட்பாலனவும் வினையுங் குறுகாமை யெந்தை
தாட்பால் வணங்கித் தலைநின்றிவை கேட்கதக்கார்.

என்று திருவாய் மலர்ந்தருளியவாறே நீ வணங்கிக் கேட்டறிவாயாக என்பார் "கேள் நீ" என்றனர். உபலத்திக்கு (அஃதாவது உள்ளது என்னும் உணர்விற்கு) விடயமானவையெல்லாம் அநுபலத்திக்கு (அஃதாவது இல்லையென்னும் உணர்விற்கு) விடயமாதல் நிச்சயம் என்பார் "அறிவறிந்த வெல்லாம் அசத்தாகும்" என்றனர். சத்தின் இயல்பு உணர்ந்தார்க்கன்றி அசத்தின் இயல்பு உணரவராதென்பார் "மெய்கண்டான் ஆயின்" என்றனர். அஃ்தற்கருமை நோக்கி "ஆயின்" என்றனர். அசற்காரியவாதிகளை "அசத்து" என்று உபசரித்தார். இன்று ஆம் ஆறு = அசத்தாமாற்றிற்கு. ஈண்டு அறிவென்றது ஒன்றைமுந்தி அதுவதுவாகச் சுட்டிக்காணும் அளவையறிவினை. இதனை "அறிவினாலறிந்தயாவு மசத்தாத லறிதி" என்னுஞ் சிவப்பிரகாசச் செய்யுளானுணர்க.

உள்ளது என்னும் உணர்விற்கு விடயமாகும் பிரபஞ்சத்தை இல்லையென்னும் உணர்விற்கு விடயமாகும் இல்பொருளோடொப்ப அசத்தென்றல் பொருந்தாது என்று நையாயிகர் கூறுவதை மறுத்து, அச்சுட்டுப் பொருள்களானவை இராசதகுணத்தால் உள்ளதென்னும் உணர்விற்கு விடயமாய், தாமதகுணத்தால் இல்லையென்னும் உணர்விற்கு விடயமாதலால் 'அறிவினாலறியப்பட்டவெல்லாம் அசத்து' என்று சாதிக்கப்பட்டது.

சத்தாகிய பிரபஞ்சத்தைச் சுட்டப்படுவதனாலேயே அசத்தென்றல் சற்காரியவாதத்திற்கு மாறாம் என்று சாங்கியர் கூறுவதை மறுத்து, பிரபஞ்சமானது காரியவவத்தையில் தூலமாய் விளங்கி

நின்றே கண்ணுக்குப்புலனாய், பின் சடுதியின் மறைந்து சூக்கும மாய் காரணவவத்தையின் விளங்காது நிற்கும் வேறுபாட்டால், அவ்வாறு புலனாகாத காரணப் பொருள்களை நோக்கக் காரியப் பிரபஞ்சம் அசத்தாம் என்று சாதிக்கப்பட்டது.

நீரிலெழுத்தும் கனவும் பேய்த்தேரும் பொய் என்பாரை மறுத்தற்கு "நிகழ்" என்று அடைகொடுத்தார். நீரிலெழுத்து தோன்றும்போதே மறைவதுபோல்பிரபஞ்சம் தோன்றும்போதே மறையும் இயல்பினதாகையாலும், கனவின்கண் காண்பவை விழித்தலினாலே முடிவுபெறுதலின்றி இடையே மறைந்துபோதல்போல பிரபஞ்சம் என்றும் நிலைத்திருத்தல்போலத் தோன்றி இடையே மறைந்துபோதலாலும், பேய்த்தேர் சூரியகிரணத்தின் வெம்மையால் தோன்றி அக்கிரணம் மேகத்துள் மறைந்த காரணத்தால் மறைந்துபோவதுபோல் பிரபஞ்சம் நோய்முதலிய யாதானுமோர் காரணங்காட்டி மறைதலாலும், நீரிலெழுத்து முதலிய மூன்றும் பிரபஞ்சத்திற்கு உவமைகளாயின. பேய்த்தேர் என்பது கொடிய பாலைநிலத்தில் கோடைகாலத்தில், நடுப்பகலில் சூரியகிரணத்தின் கொடிய வெம்மையால் சலத்தைப்போற் காணப்பட்டு, சூரியகிரணம் மேகத்துள் மறைந்தபோது மறைந்துபோவதாகிய கானல்.

இவ்வுண்மையறியாத மாயாவாதிகள் முதலியோர் பேய்த்தேர் முதலியன இல்பொருள்களாயிடுதல்போல் பிரபஞ்சமும் இல்பொருளே என்பார். இது சற்காரிய வாதமாகிய சைவசித்தாந்தத்திற்கு முரணும். பேய்த்தேர்முதலாயின மெய்யே; பொய்யன்று. எவ்வாறெனில், பேய்த்தேரை நீரெனக் காண்பதனால் அது பொய்யெனப்பட்டதேயன்றி பேய்த்தேர் பொய்யன்று. கனவின்கண் பெண்களோடு சுகிக்கும்போதும், புலி முதலியவற்றைக் கண்டு அஞ்சும்போதும் அவ்வநுபவக்குறி தூலவுடம்பினில் உண்டாவதனாலும், நீரிலெழுத்து எழுதுங்கால் உள்ளதாய் தோன்றுதலினாலும் இவையும் மெய்யே. ஆதலால் இவைகளோடு உவமிக்கப்பட்ட பிரபஞ்சமும் மெய்யேயன்றி பொய்யன்று.

திருநெல்வேலி சைவசமயத் திருக்குழாம் அச்சிட்ட

## சைவ சமயிகளுக்கு இலக்கணமான பதினாறு பேறுகள்.

1 மறைகள் நிந்தனை சைவநிந்தனை பொருமனமும் [ம்
2 தறுகண் ஐம்புலன்களுக்கேவல் 3 செய்யுருச்சதுரு
பிறவி தீதெனப் பேதையர் தம்மொடு 4 பிணக்கும்
உறுதி நல்லறம் செய்பவர் தங்களோடுறவும்

1 வேதங்கள்
2 கொடிய
3 சாமர்த்தியமும்
4 இணங்காமையும்

யாது நல்லன்பர் கேட்கினும் 5 உதவுறும் இயல்பும்
மாதவத்தினோர் 6 ஒறுப்பினும் வணங்கிடு மகிழ்வும்
ஓது நல்லுபதேசம் மெய்யுறுதியும், அன்பர் [வும்
தீது செய்யினும் சிவச்செய 7 லெனக்கொளும் 8 தெளி

5 கொடுக்கும்
6 கண்டிக்கினும்
7 கொள்ளும்
8 நிச்சயமும்

மனமும் வாக்கும் நின்னன்பர்பால் 9 ஒருப்படு செய
லும்
கனவிலும் உனதடியருக்கு அன்பராம் கருத்தும்
நினைவில் வேறொரு கடவுளை 10 வழிபடா நிலையும்
புனிதநின் புகழ்நாள்தோறும் உரைத்திடும் 11 பொ
லிவும்

9 பொருந்துகின்ற
10 வணங்காத
11 பாக்கியமும்

திமையாம் 12 புறச்சமயங்கள் ஒழித்திடு திறனும்
வாய்மை யாகவே பிறர்பொருள் 13 விழைவுறு 14
வளனும்
15 எழுறும் பரதாரம் 16 நச்சிடாத நன்னேன்பும்
17 தூய்மை நெஞ்சில் யானெனதென்னும் 18 செருக்
குறத்துறவும்

12 அன்னிய மதங்களை
13 இச்சியாத
14 வளப்பமும்
15 காவல்பொருந்திய
16 விரும்பாத
17 சுத்தமான
18 கர்வம்

19 துறக்க மீதுறைகினும் நரகில் 20 தோய்கினும்
இறக்கினும் பிறக்கினும் இன்பம் 21 துய்க்கினும்
22 பிறைக்கொழுந் தணிசடைப் பெரும இவ்வரம்
மறுத்திடா தெனக்கு நீ வழங்கல் வேண்டுமால்.

19 சொர்க்கம்
20 அழுந்தினும்
21 அனுபவிக்கினும்
22 இளஞ்சந்திரனை மறக்கொழுந்தாக அணிந்த

இப்பிரார்த்தனை சைவசமயிகளுக்குரிய அகத்து இலக்கணங்களையும் அவர்கள் கைப்பிடிக்கவேண்டிய கடமைகளையும் நன்றாய் விளக்குகின்றது. ஆகையால் சைவசமயிகள் ஒவ்வொருவரும் இப்பிரார்த்தனையை நித்தியம் பாராயணம் செய்தல்வேண்டும். இப்பிரார்த்தனையையே ஸ்ரீ கைலாசத்தில் எழுந்தருளிய ஸ்ரீ சிவபெருமானிடம் திருநந்திதேவர் செய்தருளினர். இன்னும் "பதினாறும் பெற்று பெருவாழ்வு வாழ்வாயாக" என்று வழங்கப்படும் ஆசீர்வாதமும் இதைக்குறித்தேயுள்ளது.

---

## பரமதபங்க வினாவிடை.

(160-வது பக்கத்தொடர்ச்சி.)

சை. சகம் - சிவன் - பரம் - என்னும் மூன்றனுள், சகம் கேவலம் ஜடம். இது சதுர்த்தச புவனங்களாக விரியும். இவற்றுள் மண் - சலம் - நெருப்பு - காற்று - வெளி முதலியவும், அவற்றினது விகார வடிவங்களுமே தோன்றிக்கொண்டிருக்கின்றன. இவ்வியல்பினவற்றை அறிவினது காரியமென்றிடல் யாங்ஙனம்? நீர் அறிவினின்றுஞ் சடம் தோன்றியது என்று கூறியபடி உலகாயதன் ஜடத்தினின்றும் அறிவுதோன்றியது என்று கூறுகிறன். அதனைப் பாக்கு வெற்றிலை சுண்ணம் இம்மூன்றுஞ் சேர்ந்தபோது முன்னில்லாத செவப்புநிற முண்டாவதுபோலப் பிருதிவிமுதலிய பூதங்களொன்றோடொன்று கலந்தபோது முன்னில்லாத அறிவுதோன்றுகின்றது என்று விளக்குகிறன். அவனுக்குள்ள நியாயமும் உமக்கில்லையே; சுண்ணம் வெண்மைநிறம். அதனோடு மஞ்சள் சேர்ந்தால் செந்நிறமுண்டாகின்றது. சுண்ணம் ஒன்றன் சேர்க்கைபெறுதபோது அது வெண்மையாகவே யிருக்கும். இங்ஙனமாக, அறிவு ஏகம். அதனோடு சேரத்தக்க இரண்டாவது பொருளோ உமக்கின்று. வேறொருபொரு ளிருந்தாலும் அதன் சேர்க்கையால் அறிவினிடத்தில் ஜடமாகிய சகத்துத் தோன்றியதென்று நீர் வாதிக்கலாம். ஐயா! உம்மைநோக்க உலகாயதன் புத்திசாலியென்றதேயன்றி அவனுடைய பட்சமும் உமது பட்சம்போல அங்கிகாரமற்றதென்றே அறிந்தடங்கக் கடவீர்.

ஏ. சீவனைப்பற்றி என்னசொல்லப்போகிறீர்?

சை. இந்தச்சீவனை உமது சமய நூல்கள் கூடஸ்தன் அவித்தையிற் றோய்ந்தபோதுண்டானவன் என்று கூறுகின்றன. இச்சீவர்கள் பலர். இப்பல சீவர்களுங் கர்மபரவசராய்த் தனித்தனி நாய் - கழுதை - பேய் - முதலிய பலஜந்மங்களெடுத் துழல்வார்கள். இத்தகைய சீவர்கள் அறிவினது காரியமாயிடுதல் யாங்ஙனம்? பிரமத்தைப்போலக் கூடஸ்தன் ஒருமுதலாயினவாறு மென்னை?

ஏ. இனிப் பரத்தை எவ்வாறு நிஷேதங்கூறுவீர்?

சை. உமது கொள்கையின்படி பரம் என்பது ஈசுவரன். இவ்வீசுவரன் பிரமன்-விஷ்ணு-உருத்திரன் என்னு மூன்று வடிவங்களா யுள்ளவன். இவர்களில், மாயையினது இரஜோகுணத்திற் பிரமந்தோய்ந்தபோ துண்டானவன் பிரமன். மாயையினது சத்வகுணத்திற் பிரமந்தோய்ந்தபோ துண்டானவன் விஷ்ணு. மாயையினது தமோகுணத்திற் பிரமந்தோய்ந்தபோ துண்டானவன் உருத்திரன். இவர்கள் அறிவினது காரியமாயிடுதல் யாங்ஙனம்?

ஏ. இன்னும் யாதேனுமுண்டா? இவ்வளவுதானா?

சை. அறிவு ஒன்றேயென்று சாதிக்கத் தொடங்கிய நீர் அதன் குட்டிகளாக அறிவில்லாத ஜகத்தையும், அவித்யோ பாதிகனாகிய சீவனையும், மாயோபாதிகனாகிய ஈசுவரனையுந் தேடியொப்படைத்தீர். அம்மட்டில் நில்லாமல் பலசரக்குக் கடையினுழைந்து, மண்-சலம்-நெருப்பு-காற்று-வெளி-நாய்-கழுதை-பேய்-பிரமன்-விஷ்ணு-உருத்திரன்-இராஜோகுணம்-சத்வகுணம்-தமோகுணம்-என்பனவாதி பண்டங்களை யெடுத்து வெளியிற்போட்டுக் கடைபரப்பி வைத்தீர். இவைகளை யெல்லாம் ஏகமாகிய அறிவின் காரியமென்று நீர் பிரசங்கித்தது பிரமசாரியாகிய அந்தணனொருவன் பறையன் - பள்ளன் - சக்கிலி முதலினோரையும், கழுதை-குதிரை-நாய் முதலிய பலஜந்துக்களையும் பெற்று விர்த்தியடைந்தான் என்பதற்கே ஒப்பிடத் தக்கதாம். அன்றியும், பஞ்சபாண்டவரென்றால் தெரியாதா கட்டில் கால்போல என்று வாயினாற் சொல்லிக்கொண்டு மூன்று விரலைக்காட்டி, இரண்டு விரலைக் கீழேகொண்டுபோய்,

ஒருவிரலாற் கோடிழுத்தவன் கதையும் இதற்கு நிதரிசனமாம். இதனால், ஆன்மவறிவுக்குமேல் வேறொரு அறிவில்லையென்றும், அவ்வான்மவறிவே எல்லாமாயிற்றென்றும் நீர் பொங்கி வழிந்தது பொய்யுபதேச மாயிற்றென் றொதுங்கக்கடவீர்.

ஏ. ஐயா, ஆன்மவறிவுக்குச் சிவஅறிவு உணர்த்துமானால், அச்சிவ அறிவுக்கு உணர்த்துவது வேறு எந்த அறிவு?

சை. உணர்த்துமறிவுக்குமேல் வேறொரு அறிவினை வேண்டார் மெய்யுணர்ந்தோர். மெய்யெழுத்துக்களை யொலிப்பன உயிரெழுத்துக்கள். அவ் வுயிரெழுத்துக்களை யொலிப்பதற்கு வேறு எழுத்துக்கள் வேண்டப்படுமாறெங்ஙனம்? இவ்வாறுவிசாரியாமையால், "வாலறிவன்" என்னும் வள்ளுவர்வாக்குக்கு வகைதெரியாது பொருள்கொண்டு வசைக்குள்ளாயினீர். இதனால், "வாலறிவன்" என்றெடுத்தோதப்பெற்ற பரம்பொருள் நுமதான்ம வறிவாயின தில்லையெனல் சரதஞ்செய்யப்பட்டது கண்டீர்.

ஏ. ஐயா, நீர்போனவழியே இதுவரையில் யாம் விட்டுவந்தோம். இப்போது ஒன்று சொல்லுகிறேன்கேளும்.

சை. நீர் எந்தவழிபோனாலும் யாம் கூடவே வருகிறோம், சொல்லும்.

ஏ. சகசிவபரங்கள் மூன்றும் அறிவாகிய தன்னிடத்திற் கற்பிதம். ஆகையால், அறிவொன்றே மெய். எல்லாம் பொய்.

சை. எல்லாம் பொய்யாகுகையில் நீரும்பொய். உமது வார்த்தையும் பொய். இதுவரையில் நீர் எம்மோடு பேசியதும்பொய். இப்போது பேசுவதும் பொய். இனிப் பேசுவதும் பொய். இப்பொய் வார்த்தைகளுக்கு விஷயமான அறிவு ஒன்றே மெய்யென்றதும் பொய் அறிவும் பொய். அறிவு என்னுஞ் சொல்லும்பொய். எல்லாம் பொய். எழுந்தோடிப்போம்.

# சங்கராசாரியர் சரித்திரவாராய்ச்சி.

(180 - வது பக்கத்தொடர்ச்சி.)

சங்கரர் அகம்பிரமமென்று கூறியதைச், சரிதர் சிவோகமென்று மாற்றியது, அவ்விரு வாக்கியங்களுக்கும் பொருளொன்றெனவேகொண்டு, சிவோகமென்றாற் சைவர்களாகிய நமக்குவப்பாகுமென்று கருதியேபோலும். அவ்விரு வாக்கியங்களுந் தம்முள் மலையிலக்கான வேற்றுமையுடையன வென்பதவரறிந்திலர். அகம்பிரமம் என்பதில் (அகம்) நான் என்னும் ஆன்மா, ஆணவமுனைப்பால் முற்பட்டு நிற்பப், பிரமம் பிற்பட்டு நிற்றலால், இது பெத்த திசையை விளக்கிப் பசுஞானிகள் கூற்றேயாய் நிலைபெறும். சிவோகம் என்பதில் சிவம் முன்னிற்ப (அகம்) நான் என்னும் ஆன்மா ஆணவமுனைப்பு முற்றுங் கைவிட்டு அச்சிவத்துள் வியாப்பியமாயடங்கிப் பின்னிற்றலால், இது பசுத்துவ நீக்கத்துச் சிவத்துவப் பேறுற்ற முத்தி திசையை விளக்கிச் சீவமுத்த சிவவாக்கியமேயாய் நிலைபெறும். இவ்விளக்கத்தால், அகம்பிரமம் பெத்தநிலையும் சிவோகம் முத்திநிலையும் விளக்குமென்னு முண்மையை ஒருபாற் கோடாத உத்தம புத்திமான்களுணர்வார்கள்.

இச்சங்கரர், அகம்பிரமம் என்னும் எழுச்சியும் அதற்கே சாதகமாகவாய்ந்த வித்துவத்திறமையு முடையராதலால், எவரையும் வென்று மேம்படக் கருதுமாசையால், அங்கங்குள்ள அரசர்களை வசப்படுத்தி அவர்களுடன் எங்குஞ்சென்று துணைவலியுங்காட்டி வெல்லுதலும், மிஞ்சியவிடத்து நரசிங்கத்தை ஏவிக்கொல்லுதலும், செய்துவந்ததையே திக்குவிஜயப்பெருமையாகக் கூறுகின்ற சரிதர், பின் பதினாறுவது அத்தியாயத்தில் சங்கரர், சபையிலுள்ள புலவர்களைத் தோல்வியுறச்செய்து அவமானப்படுத்தி வருந்தும்படி தமது வித்தைச் செருக்கினைக்காட்டுவது அதிபாதகமென்று கூறுகின்ற நூன்முறைபற்றி, அபிநவகுத்தரேவலால் வந்த ரத்தமூல நோயுற்று வருந்தி, வேறெவ்விதத்தாலுந் தீராமல் எப்பொழுதும் அபானத்தாலிரத்தமொழுகுதலின் வஸ்திராதி துர்நாற்றமுஞ் சகியாமல் (நானே பிரமமெனக்கொண்ட எழுச்சிமுழுதுங் கைவிட்டு நாமெல்லாம் மும்மலப் பசுக்களே, பசுபதி சிவனொருவனே; இந்தச் சமயம் அவன் அருளினாலன்றி வேறுகதியில்லை யென்னு முண்மையைத் துன்பமேலிட்ட வழியாலுணர்ந்து, சர்வரோக நிவாரணபதியாகிய)

வயித்தியநாதரைத்துதித்துரோகநீங்கப்பெற்றனர். அதன்பின்னும் அந்நோயை ஏவிய அபிநவகுத்த ரிடைக்கொண்ட விரோதமே வீட்டினால், அச்சங்கரர் சீடராகிய பத்மபாதரால் அபிநவகுத்தர் கொல்லப்பட்டாரென்றுங் கூறுகின்றார்.

இனிச்சங்கரர், மண்டனபண்டிதரை வாதித்து வென்றமை கூறினர். வாதந்தொடங்கு முன்னிகழ்ந்த அனுவசிய வார்த்தைகள்பல; அவற்றை விரிப்பதாபாசம். அமைக. பின்பு மண்டனர் பத்தினி சரஸ்வதி யென்று தெரிந்து சத்தியலோகஞ் செல்கின்ற அவளை மந்திரசெப தியானத்தால் அழைத்தாரென்றும், அவள் வந்துனக்கு யாதுவேண்டுமென்று வினவச், சங்கரர் அந்துவித முடிவை நிலைநிறுத்தவேண்டுமென்று வாகீஸ்வரிஸ்தவமென்றொருநூல்செய்து துதித்து, என்னம்மே பரதெய்வமாகிய தாயே நீ இங்கிருந்தருளி அடியேங்கள் வேண்டுந்தோறுங் காட்சிதந்தருள வேண்டுமென்று பிரார்த்திக்க, அப்படியே வரங்கொடுத்தாளென்றுங் கூறியசரிதர், பின்பு அவளையும் வாதித்து வென்றாரென்று கூறுகின்றார். அந்த வைபவத்தைப் பின்வருவனவற்றாற்காண்க.

எல்லாவித்தைகளுக்கு மூலமான பரமேசுரனாகிய சங்கரருக்கும், அவித்தையே வடிவாகிய சரஸ்வதிக்கும் பதினேழுநாள் வாத நடந்ததென்றும், வேதாகமபுராணேதிகாசாதி எல்லா நூல்களினுஞ் சங்கரர் அளவற்ற அறிவுடையவராயிருந்தாரென்றும், சரஸ்வதிக்குள்ள சந்தேகங்களெல்லாம் நீங்கினவென்றுங் கூறினர். வணங்கித்துதித்து வரம்பெற்ற சங்கரர் பரமேசுரனும்; வரங்கொடுத்த சரஸ்வதி அவித்தையாம். இவளுக்கு அவரால் சந்தேகங்கள் நீங்கினவாம். இந்த உழறுபடையை விரிப்பானேன். அமைக. பின்பு சரஸ்வதி காமநூலிற் பலவினாக்கள்வினவச், சங்கரர் விடையின்றித் தலைகுனிந்து யோசித்திருந்து ஒருமாதந் தவணைகேட்டுச் சென்றாரென்றும், சென்ற சந்நியாசியாகிய சங்கரர் பெண்களுடன் கலவி செய்து தான் காமநூல் விபரந்தெரிய வேண்டுமென்று நிச்சயித்தாரென்றும், அப்போது சீடராகிய பதுமபாதர் இது உமது ஆச்சிரமவிரோதமாகும், மாதர்கலவி மீளவிடாது. பழிபாவத்துக்கிடமாகும், உம்மைப்பார்த்து மனந்துணிந்து இத்தீயநெறியொழுகி மற்றவர்களுங் கெட்டுப்போவார்களென்று, முன்பு மாதர்மயக்கத்தாற் கெட்ட சிலகதைகளுங் கூறி மறுத்தாரென்றும், அதுகேட்ட சங்

கரர், அகம்பிரமஞானியாகிய எனக்கு புண்ணியபாவஞ் சுவர்க்க நரகமுதலான ஒன்றுமில்லை; நான் எது செய்யினும் பாதகமாகாது; இவ்வுடம்புடனேயே மாதர்கலவிசெய்யினுங் குற்றமாகாது; ஆயினுஞ் சான்றோரொழுக்கம் பற்றிச் சந்நியாசவிரத பங்கம்வராமல் வேறுடம்புகொண்டு மாதர் கலவிசெய்வேனென்று சிலகதைகளுங் கூறிமறுத்துவிட்டு, அந்தச்சமயம் இறந்துகிடந்த அமரகனென்னு மரசனுடலிற் பிரவேசித்து, அரசனுயிர்பெற் றெழுந்தானென்று யாவருங் கொண்டாடும்படி வஞ்சித்து நின்று, அவ்வரசன் பத்தினிகள் நூற்றுவருடன் சதாகலந்து போகித்து, அக்காமத்தின் முழுசி நின்றமைதெரிய அமரகம் என்றொரு காமநூல்செய்து, அந்தப் புரத்திலேயே வசிக்கும்போது, முன்பு சீடர்காவலில் வைக்கப் பட்ட தமதுடம்பு தகனமாவது தெரியாமல், சீடர்கள் வந்தணுகிக் குறிப்பானுணர்த்தி வற்புறுத்தினபின் சில அவயவங்களெரிந்து குறைந்தசமயத்தில் தெரிந்து, (தமக்குக் காமகலாபோதகாசிரியர்களாகிய அரசபத்தினிகளுக்கு நம்பிக்கைத்துரோகஞ்செய்து) உடனே அரசனுடலைவிட்டு நீங்கித் தகனமாகின்ற தமதுடலிற் பிரவேசித்து, விஷ்ணுவை வழிபட்டு எரிகின்ற தீயைத்தணிப்பித்தும் மேலெழமாட்டாமல், நரசிங்கோபாசனைசெய்து, அதுவந்து கைப் பற்றித் தூக்கிவிட்டபின் எழுந்து நரசிம்மகராவலம்பம் என்றொரு நூல்செய்து துதித்துய்ந்தாரென்றும், பின்புவந்து காமநூல்வாதஞ் செய்து வென்றாரென்றுங் கூறுகின்றார். இதனாலிவர் சரஸ்வதியைத் தவணைகேட்டுச்சென்று சந்நியாசவிரத பங்கமுற்று வந்து வென்ற வைபவம் விளக்கமாகின்றதன்றோ? தனக்கு மூக்குப்போனாலும் போகட்டும், எதிரிக்குச் சகுனத் தடையானால் நல்லது என்பது போலச், சந்நியாச பங்கமானாலென்ன எது எப்படிப்போனாலென்ன, யாரையும் வென்றோமென்ற பேரேவேண்டியதென் றுறைத் தெழுகின்ற எழுச்சியுள்ள இவர் எல்லாமித்தை பிரமமே நித்தியம் நானே அப்பிரமமென்று கூறுதல் என்னபொருத்தமோ விவேகிகளுணர்வாராக; விரிப்பானேன்.

பரமசிவன், தாருகவனத்துக்கு அதிசுந்தரபிக்ஷாடன ரூபராகச் செல்லுங்கால், விஷ்ணுவாகிய மோகினிபாலிச்சையுற்றனராம். அதனால் காமாரியென்னும் பெயருக்குப் பங்கம் வந்துவிட்டதாம். அப்பங்கத்தை அவரே சங்கராய் வந்து சந்நியாசியாயிருந்து மாற்றினராம். நீக்கமிலாத சிவத்துரோகத்துக்கு ஆளாகி எங்குமில்

லாத இப்பெரும் பாதகங்கூறிய சரிதருக்கு, வேடமாறி வஞ்சித்து ராஜபத்தினிகள் நூற்றுவரைப் புணர்ந்து காமுகராயிருந்த சங்கரர் காமாரியென்ற பேருக்குவந்த பங்கத்தை மாற்றினாரென்று பொய் கூறுவது சிறிதும் பொருந்தாதேயென்று சிறுவரும் விளங்கிக் கொள்ளக்கூடிய தெளிவுமில்லாமற் போனதென்னையோ? காமாரி என்றபேருக்குப் பங்கம்வரின், அப்பெரும் பெயர் கூறிய சுருதி யெல்லாம் புராணேதிகாசாதி நூலெல்லாம் அபத்த நூல்களென்றாகி, பரமசிவன் காமாதுரனென்றாகி, அவனது சர்வஞ்ஞதாதி நித்தியமங்கள திவ்வியகுணங்களுமின்றாகி, அவன் ஆன்மாவுக்கருளும் பேறுகளுமின்றாகி இன்னும் எல்லா அனர்த்தங்களும் விளையுமே என்று சிறிதும் யோசியாது, அவனுக்கு எக்காலத்துமில்லாத காமாதுரத்தன்மையை இச்சரிதர் கூறவந்தது, தமது சங்கரருக்கு மேன்மைகூறக் கருதியேயன்றி வேறில்லை. அதிலாசையுற்ற இவர், சங்கரர் வஞ்சித்து நூறுபெண்களைப் புணர்ந்து காமாதுரராயிருந்ததை யாதாய் நினைத்தனரோ? ஆனால் வேறுடம்புகொண்டு தானே புணர்ந்தார், அதனால் சந்நியாச விரதபங்கமில்லையே என்பர்போலும். மிகஅழகு. காமநூல் விவரம் பெண்களைப் புணர்ந்து தான் தெரியவேண்டுமோ? சுத்தாத்துவித சைவசித்தாந்த சிகாமணியாகிய குமரகுருபரசுவாமிகள், பிறர்வேண்டுகோளுக்காகக் காமநூற் பிரசங்கம் அந்நூலுணர்ச்சியாலேயே செய்து, அதில் சந்தேகித்தவர்களுக்கு, மலம் புளிப்பென்பது வைத்தியநூலுணர்ச்சியாலன்றி யாராவது உண்டு அனுபவத்தால் தெரிந்து சொல்வதல்லவே என்று விளக்கியதை இச்சரிதர் கேட்டு மறிந்திலர்போலும். தமது சந்நியாசவிரத பங்கம் வாராமற் காமநூலுணர்ச்சிகொண்டே வாதித்து வெல்லும் வழியிருக்க அதைவிட்டு மாதர்பாழ்ங்குழியே வழியாக வுணர்ந்த சங்கரர், பரமசிவ காமாரிநாம பங்கத்தை மாற்றினாரென்றுகூற இவர் மனந்துணிந்ததை என்னென்று கூறுவது. நிற்க.

இனிப், பரமசிவன் மோகினிபாலிச்சையுற்றாரென்ற பெரும் பாதகப் பெரும் பொய்யைவிட்டு உண்மைநோக்குவார் பின்வருங் கந்தபுராண சரித்திரத்தை நோக்குக. சிவனது அதிசுந்தரரூபங் கண்டளவே, விஷ்ணு, தான் புருடோத்தமனென்பதையு மறந்து, மோகினி ரூபங்கொண்ட அம்மட்டிலேயே அச்சுந்தரரூபத்தில் அதிகமோகமுற்று என்னைத் தழுவி என்னிச்சையை மாற்றவேண்டுமென்று பிரார்த்திப்ப, அதுகேட்ட பரமசிவன், உன்னுடைய

பிராகிருதரூபத்தால் நமது மாயாதீத சுத்தரூபமாகிய இதனைத் தழுவ முடியாது. தழுவினுஞ் சாம்பராகிவிடும். ஆதலால் உன்னிச்சைப்படி உன்னுருவுக்கியைந்த வேறு ரூபங்கொண்டு பிற்காலத்தில் உன்னைத்தழுவி உன்னிச்சையை முடிப்போம். இப்போது குறிப்பிட்ட காரியத்தைச் செய்யென்று ஆஞ்ஞாபித்தனரென்பதே யுண்மையென்க. சந்தேகமற அக்கந்த புராணத்தில் எப்பொழுதுங் காணலாம்.

இனிச், சங்கரர் சாக்தமத கண்டனஞ்செய்யத் தொடங்கி, அச்சக்தியின் கோபத்தாலிடர்ப்பட்டுச் சௌந்தரியலகரி நூலாற் றுதித்துய்ந்தாரென்று கூறியசரிதர், அச்சங்கரர் நீலகண்ட சிவாசாரியரை அடுத்தவமதிப்புற்று அவரைக் கொல்லும்படி நரசிங்கத்தை ஏவ, அது அங்குச்சென்று ஆற்றலின்றித் தம்மீது திரும்பியதுகண்டு மிகவருந்திச் சிவாசாரியரை யடைந்து வணங்கி யுண்மையுணர்ந்து அகம்பிரமக்கோண் முற்றுங்கைவிட்டுச் சிவதீக்ஷாதி பெற்றுச் சித்தாந்த சைவராய்ச், சிவானந்தலகரி சிவபுஜங்கம் தேவிபுஜங்கமுதலிய நூல்களைச் சைவபரமாகவே செய்துய்ந்தாரென்பதுங் கூறிலர். இது அவமதிப்பென்று நினைத்தார்போலும். இதுவே முந்தினவைக்கெல்லாம் பிராயச்சித்தமாக நின்றுய்வித்த மகிமைத்தென்றுணராமல் இவர் மறைத்துவைத்தாலும் அந்நூல்கள் லோகப்பிரசித்தியாய்நின் றுண்மைவிளக்குகின்றன. சங்கரர் நீலகண்ட சிவாசாரியரை யடைந்து சைவரான மகிமை நீலகண்டவிஜயத்திற் கூறப்பெற்றது. இதனைக் காட்டாவூர்ச் சுந்தரசிவாசாரியரும் சிவாதிக்கரத்னவளியிற் கூறியுள்ளார்.

ஆனைக்கும் அடிசருக்குமென்றபடி, விரிந்துகிடந்த வேதங்களை நன்குணர்ந்து வகுத்துப் புராணங்களையு முறைப்படுத்தோதிய வியாசமுனிவரும் ஒருசமயந் தாமசகுணவயத்தராய், விசுவநாத சந்நிதியில் நாராயணனே பதியென்று பொய்புகன்று கைதம்பிக்கப்பட்டு அந்நாராயணர் வேண்டுகோளாலது நீங்கியுய்ந்தார். அதனால் அவருலகராலிழிக்கப்பட்டிலர். அதுபோல இச்சங்கரரும், ஆதியில், "உலகத்தா ருண்டென்ப தில்லென்பான் வையத், தலகையா வைக்கப்படும்." என்ற தேவர் சுருதியின்படி வேதசிவாகமாதி சிவசாஸ்திரமுணர்ந்த பெரியோர்கள் பதியுண்டு பசுவுண்டு பாசமுண்டென்று கூறுகின்ற முடிந்த முடிவாகிய சைவசித்தாந்த சத்காரியவாத விரோதமாய்ச், சீவனில்லை செகத்தில்லை ஈசுரனில்லை,

பிரமமொன்றேயுள்ளது. நானே அப்பிரமமென்னும் அகம் பிரமங் கூறிக், "காதலின ஞன்பிரமமென்னுஞானம் கருதுபசுஞானம்" என்ற சித்தாந்தசுருதிப்படி அகம்பிரமஞான மேற்கொண்டிருந்தாலும் தவப்பயனுற்றிருவருள் கைகூடப்பெற்றுச், சந்திரமௌலீச பூஜாதிசிவ நியமசித்தாந்த சிவஞானியாய் விளங்குதலால், இவர் முன்கொண்ட அகம் பிரமநிலை நோக்கி உதாசீனஞ் செய்யப்பெறு ரென்க. சரித்திரக்காரர்கள், சங்கரரை உயர்த்தக்கருதிப் பாதகங்களுக்கிடமாகக் கூறியவைகளன்றி, அவருக்குள்ளபடி கூறுமேன்மைகளில் யாருக்கும் விரோதமில்லை. குருபக்தி விசேடத்தால் குருவையுயர்த்திக் கூறுதல் எம்மதத்தருக்குஞ் சம்மதமே. விநாயக சுப்பிரமணியாதியரும் வந்து தொண்டு செய்கின்றார்களென்று யார்தாங் கூறுவார்கள். சங்கரர் சிவாம்சமாதலால் விநாயகாதியர் வந்து தொண்டுசெய்தாரென்பது விரோதமின்றெனில், அது அவர்க்குந் துணிவில்லை. தக்கபிரமாணமுமில்லை. மதிமறந்து கூறினும் விநாயகாதியரின் அம்சங்களே தொண்டரென்றுவது சொல்லித் தொலைக்காமல் சாக்ஷாத் விநாயகாதியென்றதென்னையோ? அன்றியும் சிவகலையே சங்கரராய்வந்ததென்ற முழுப்பொய்யையே எங்கு நிறுத்தப்பயந்து, சிவன் பிறந்திலன் மாயையே சங்கரராய்ப்பிறந்த தென்று கூறுதலை நோக்குவார்க்குச் சங்கரர் கர்மானுகுணமாகப் பிறந்து திருவருளாற் பரிபாக மடைந்தவரென்னு முண்மை வெளியாகுமென்க.

நன்மையென்று சரித்திரங்கூறப்புகுந்து சிவத்துரோகத்துக்கிடமானவைகள் கூறின சரிதர், அச்சங்கரர் கோபத்துக்கே யிலக்காவரன்றி வேறில்லை. இன்னுமிவர் கூறும் பூர்வாபர விரோதம் பொருந்தாமைகள் பலவற்றையும் ஸ்தாலிபுலாகத்தாற் காண்க. இவைகளைப் பிறர் மெய்யெனக்கொண்டு மயங்கா துண்மையுணரும்பொருட்டே திருவருளை வேண்டிநின்று இவர் சரித்திரத்தையுஞ் சுருக்கிக்காட்டி இந்நூல் செய்யப்பெற்றது.

நல்லது, சங்கரபாஷியம் பிரமம் ஒன்றொழிய மற்றெல்லாமித்தை யென்பது, உபநிடத வாய்மையாகவும் அதனைப்புறக்கணிப்பதென்னெனிற் கூறுதும்; விரோதபுத்தியின்றி ஒருபக்கங்கோடாமலுய்த்துணர்க. "பற்றுக பற்றற்றான் பற்றினை யப்பற்றைப், பற்றுக பற்றுவிடற்கு" என்ற திவ்வியசுருதி சிரமேற்கொண்டு பிரபஞ்சப்

பற்றை நீக்காதிறுகப்பற்றிய சீவர்கள், அப்பற்று முற்றும் விட்டொழிய வேண்டுமானால், அவையெல்லா மித்தையே யென்று அதற்குரிய உதாரணங்கள் பொருந்தக்கூறினாலன்றி அப்பற்று விட்டொழியாதென்னுங்கருத்தால் அவ்வுபநிடதங்கள் கூறினவன்றி வேறில்லை. அதனைப், பதிபசுபாச நித்தியங் கூறுகின்ற சுவேதாச்சுவதரமுதலிய எத்தனையோ பிரபலோபநிடதங்களாற் றெளிக. மித்தை கூறும் உபநிடததாற்பரிய நோக்காமற் கொடிறும் பேதையுங்கொண்டது விடாவென்றபடி மித்தியாவாதமே பற்றிநிற்பார் நித்தியங்கூறு முபநிடதங்களினுண்மைப் பொருட்கு என்னதாற்பரியங் கூறுவர். சுருதிகளெல்லாம், தியேயனுந் தியாதாவுமுள்பொருள்களென்றே கூறுகின்றன. மற்றெல்லாமித்தை யென்பவர்களும் அது வாசாமாத்திரமாயொழியத் தியேயனொருவனைத் தியானித்து வழிபடுகின்றவர்களாகவே யிருக்கின்றார்கள். இதனை, அவர்கள் நாடோறுநியமமாகச் செய்துவருகின்ற ஸ்நானானுஷ்டான செபதவ தியான பூஜாதிகளே தெளிய விளக்கும். இனி அவை யெல்லாம் சற்காரியவாதபக்கமாய் நின்றுண்மையெனக் கருதிப் பலனைவிரும்பிச் செய்யவில்லையென்றால், அப்பூஜாதிகள் உலகரைமருட்டி வஞ்சித்துப் பொருள்கவரச்செய்யும் பொய்வேடமே யென்றாகி யிங்கு மிழிவுதந்து அங்கும் நிரய ஏதுவாய் முடியுமேயன்றி வேறில்லை யென்க. இனி, இவர்களுந் தங்களுக்கு ஏதேனும் ஆபத்து வந்தபொழுது மற்றெல்லா மித்தையென் றிறுகப்பற்றியதடியோடொழிந்து இறைவனுண்டு நாமடிமை யென்று பற்றிப் பிரார்த்தனாதிகள் செய்து அவை பலன்கொடுத்துய்விக்கு முண்மையுமவர்களே அறிவார்கள்; அறிந்தும் ஆபத்து நீங்கியபின் முன்னைமித்தியாவாதமேற்கொண்டு வாய்மதம்பேசுவார்கள். இப்படியே இவர்களது ஒரு வழிப்படா நிலைமையுலகெலா முணரும். விரிப்பானேன். அமைக.

இச்சங்கராசாரியராற் செய்யப்பெற்றுள்ள சிவபுஜங்கசுலோகம் (சஉ) ம், தேவிபுஜங்க சுலோகம் (உஅ) ம் ஆக (எ0) சுலோகங்களின் வாக்கிய தாற்பரியங்களை வரிசையாக (எ0) கவிகளில் அமைத்து மேலும் (௩அ) கவிகள் சேர்த்துச் செய்யப்பெற்ற, வேதவனேசஸ்தவ மென்னும் நூலும் இச்சோமசுந்தரமாலையுடன் சேர்க்கப் பெற்றுள்ளது.

---

## விநாயக சதுர்த்தி விரதம்.

(இது சைவம் இரண்டாமலரில் விரிவாய் விளக்கப்பட்டது.)

மகததேசத்திற் சிறந்து யாவராலும் வணக்கப்பெற்றிருந்த மாகதனென்னுமோர் முனிவன் சரியைமுதலிய நான்கு பாதங்களை யனுசரித்து ஞானவீரியங்கொண்டு மெய்ப்பொருளை யிடைவிடாது சிந்திப்பவனாய்க் காட்டில் வசித்திருக்கும்போது, விபுதையென்னு மோரரக்கி தனக்குப் புத்திரனில்லாக் குறைவால் அம்முனிவரிடத்து வந்து சுவாமி அடியேனுக்குக் கல்வி செல்வம் விரதம் தவம் முதலியவற்றிற் சிறந்தவோர் புத்திரனை அனுக்கிரகஞ் செய்யவேண்டுமென்று வணங்கினள். அம்முனிவர் அவளது பணிவிற்கிசைந்து அவளைச்சேரக் கயமுகாசூரன் பிறந்தனன். இக்கயமுகன் திரிமூர்த்திகளாலும் காணற்கரிய சிவபெருமானை நோக்கித் தவஞ் செய்யச் சிவபெருமான் அவனது தவத்திற் கிரங்கி அவனிஷ்டப்படி தேவர்கள் முதலிய யாவரும் வணங்கி யேவல்கேட்டுநிற்க வரந் தந்து மறைந்தருளினர். பின்னர் கயமுகாசூரன் செய்யுங்கொடூரத்தைச் சகியாது தேவர்களும் முனிவர்களும் நெடுங்காலம் வருத்தமடைந்தவராய்க் கைலாயத்தில் பரமசிவனிடத்தில் முறையிட்டனர்.

சர்வஜீவ தயாபரனாகிய பரமசிவன் அத்தேவர் முதலியோரை இரட்சிக்க விரும்பிப் பார்வதியாருடன் அக்கயிலாயகிரிச் சாரலில் ஓர் சோலைக்கண் சித்திரங்களால் நிறைக்கப்பட்டு விளங்கும் ஓர் மண்டபத்தைச் சேர்ந்து களிப்புடன் வசித்திருந்தபோது அங்கே எழுதியிருந்த சித்திரங்களில் சத்திசிவாத்மகமாகிய சித்திரப்பிரணவங்களிரண்டிருந்தன; அவற்றை நோக்க அந்நோக்கத்தால் அவை ஆண்யானையும் பெண்யானையுமாய்ப் புணர்ந்தபோது பூதாங்கம், தேவாங்கம், மிருகாங்கம் என்னு மூன்றங்கங்களுடன் பிரணவ சொரூபியாய் விநாயகர் அவதரித்து பூதகணங்களுக்குத் தலைவராய்க் கணபதியென்னும் காரணப்பெயருடன் கயிலாயத்தில் வீற்றிருந்தனர்.

அப்போது கயமுகாசுரனால் வருத்தமுற்றதேவர் முதலியோர் தங்குறைகளைச் சொல்லி முறையிட்டுத் துதித்தனர். அக்கடவுள் அவர்க்கிரங்கிப் பூதகணங்கள் சூழ்ந்துவரும்படி சென்று அக்கயமுகா சுரனுடனெதிர்த்துப் போர்செய்தபோது அவன் எவ்வித ஆயுதங்களாலும் இறவானென் றுணர்ந்து தமது திவ்விய திருமுகத்தின்கண் விளங்கியிருந்த வலப்புறக் கொம்பை யொடித்து

அவன்மேல்விட்டு அவனை வதைக்கும்போது அவன் இறவாதிருக்க வரம்பெற்றவனாதலால் அச்சரீரமாறிப் பெருச்சாளியாய்வர அதன் மேல் ஆரோகணித்தனர். அவ்வளவில் அவனுக்கு ஞானோதயமாய் அக்கடவுளுக்கு வாகனமாயிருப்பதே பெரும்பேறென்றெண்ணி அக்கடவுளின் கிருபையால் வாகனமா யமைந்தனன். பின்னர் தேவர்முதலியோரியாவரும் ஏககாலத்தில் ஆராதனைசெய்து வணங்கி அவ்வவர்க்கு வேண்டும் வரங்களைப் பெற்றுக்கொண்டு இடர் நீங்கிக் களிப்புடன் சென்றனர். பின்னர் ஓர் காலத்தில் இராவணன் பூசித்து அரசையும், அகத்தியமுனிவர் பூசித்து வேண்டிய வரங்களையும், தேவேந்திரன் பூசித்து தன்னால் பூலோகத்தில் உண்டாக்கப்பட்ட நந்தவனத்திற்கு நீரையும் பெற்றனர்.

முன்னொரு கற்பத்தில் ஸ்ரீ விநாயகக்கடவுள் பிரமதேவன் கொட்டாவியில் உதித்த சிந்துரனென்பவனைச் சங்கரிக்கக் கஜானன மூர்த்தியாயவதரித்த தினமும் உமாதேவியார்பூசித்த தினமும் புருசுண்டர் முதலிய மஹாரிஷிகளும், ஔவையாரும், மற்றும் பலரும் தொழுது அவ்வவரெண்ணப்படி தக்கபேறடைந்தனர். அத்தினமும் ஆவணிமீ பூர்வபக்ஷ சதுர்த்தி திதியாகலான் அத்தினம் விநாயக விரதஞ்செய்ய மிகத்தக்கதினமாயது. ஆதலின் யாவரும் அத்தினத்தில் அவ்விரதத்தை யனுட்டிப்பார்களாயின் வேண்டியபேற்றை யடைவார்கள் என்பதற்குச் சந்தேகமேயில்லை. கணபதிதுணை.

## விநாயகர் பூஜாவிதி.

ஆவணிமீ பூர்வபட்ச சதுர்த்தி திதியாகிய அத்தினம் காலையில் ஸ்நானஞ்செய்து நித்திய கர்மானுட்டானங்களை முடித்துக் கொண்டு அபிஷேகம் அலங்காரம் அருச்சனை நிவேதனம் முதலியவைகளுக்கு வேண்டிய பொருள்களைச் சேகரித்து ஓர் பூஜாமண்டபம் அலங்கரித்துப் பரிசுத்தமான மிருத்திகையெடுத்து அதில் வேர் கல்செல் முதலியவற்றைக் கலந்து விதிப்படி விநாயகர் திருவுருவமமைத்து ஓர் பீடத்தில் எழுந்தருளப்பண்ணி கூடுமானால் பக்கத்தில் ஒரு சொர்னத் திருவுருவமைத்து வைத்து எதிரில் கலசஸ்தாபனஞ் செய்து ஆகம விதிப்படி மந்திரோச்சாரணையோடு பூஜித்து.

சுலோகம்.

"மூஷிகவாஹன மோதக ஹஸ்த
சாமரகர்ண விளம்பித சூத்ர
வாமனரூப மஹேஸ்வர புத்ர
விக்ந விநாயக பாதநமஸ்தே."

எனவரும் பாமாலைகளால் தோத்திரஞ்செய்து

ஓம் ஸுமுகாய நமஃ
ஓம் ஏகதந்தாய நமஃ
ஓம் கபிலாய நமஃ
ஓம் கஜகர்ணிகாய நமஃ
ஓம் லம்போதராய நமஃ
ஓம் விகடாய நமஃ
ஓம் விக்நராஜாய நமஃ
ஓம் விநாயகாய நமஃ
ஓம் தூமகேதவே நமஃ
ஓம் கணத்யக்ஷாய நமஃ
ஓம் பாலசந்திராய நமஃ
ஓம் வக்ரதுண்டாய நமஃ
ஓம் சூர்ப்பகர்ணாய நமஃ
ஓம் ஹேரம்பாய நமஃ
ஓம் ஸ்கந்தபூர்வஜாய நமஃ
ஓம் மஹாகணபதியே நமஃ

எனப் பத்திர புஷ்பங்களா லர்ச்சித்து தூபதீபங்காட்டி நைவேத்தியங் கொடுத்து

"வக்ரதுண்ட மஹாகாய
சூரியகோடி ஸமப்ரபா
அவிக்நம் குருமேதேவ
ஸர்வகார்யே ஷுஸர்வதா."

என்று பிரார்த்தித்து பிரதக்ஷண நமஸ்காரஞ்செய்து சத்ர சாமர நிர்த்த கீத வாத்யாதி சோடசோபசாரங்களுடன் பூஜிக்க வேண்டும்.

(ஞானபாநு).

---

## சிவமஹாபுராணம்.

### புராணசிரவண மகிமை.

ஸூதமுநிவர், நைமிசாரணியவாசிகளாகிய சௌநகாதி முநிவர்களே! பூர்வம் புராணசிரவண பலமெனத்தகையது? எனக்குச் சொல்லவேண்டுமென ஸநத்குமாரமுநிவர் தமது தந்தையாகிய பிரமதேவரைக்கேட்க, பிரமதேவர் அதனை ஸநத்குமார முநிவருக்

குரைத்தனர். ஸநத்குமார முனிவர் பின்னொருகாலத்தில் அதனையே வியாஸபகவானுக்கு வெளியிட்டனர். அவ்வியாஸபகவான் எனக்குக் கூறியருளிய வகையே யான் உங்களுக்குச் சொல்லுகின்றேன் கேட்பீர்களாகவென்று சொல்லத்தொடங்கினர்.

பிரமதேவர் ஸநத்குமார முனிவரை நோக்கிச் சொல்லுகின்றார். புத்திரனே! யானொருகாலத்தில் இயமலோகத்திற்கு வினைதார்த் தமர்கச் சென்றபொழுது இயமதருமன் என்னைப் பலவிதமாகப் பூசித்து அர்க்கிய பாத்திய ஆசமனாதிகளாலுபசரித்தனன். பின்னர் ஓர் திவ்வியமான பீடத்தில் இருவருமிருந்து விலாசமாகப் பேசிக்கொண்டிருக்கையில் அற்புதமொன்றனைக் கண்டேன், அஃதென்னெனில் வைடூரியமணிகளாற் செய்யப்பட்ட வோரமுடையதாய், பலவித ரத்னங்களாலும் முத்தங்களாலும் அலங்கரிக்கப்பட்டதாய் மணிமாலைகள் கட்டப்பட்டுக் கணகணவென்னுமொலியுடையதாகிய திவ்விய விமானத்திலேறி யோர் திவ்விய புருஷன் வர, இயமன் அப்புருஷனைக்கண்டு தண்ணென்றெழுந்து சுபகரமான வார்த்தைகளைச் சொல்லி, சுகமாவென்று விசாரித்து, தர்மமுணர்ந்தவனே! உனது தரிசனத்தாற் சந்தோஷமடைந்தனன். உனக்கு இங்கிருக்க விருப்பமுள்ளவரையிலிருந்து பின்னர் நீ பிரமலோகத்திற்குச் செல்லலாம் எனக்கூறினன். அப்பொழுதே மற்றொருவன் அவ்வகைய திவ்விய விமானமிவர்ந்து இயமதருமனிடம் வந்துசேர இயமதருமன் அவனையும் அன்புடன் பூசித்து முன்வந்தவனுக்குக் கூறியதுபோலவே உபசாரவார்த்தைகள் கூறி க்ஷேமம் விசாரித்தனன். இவ்வண்ண நிகழ்ந்ததுகண் டதிசயித்த யான் இயமனை நோக்கி, உன்னிடம் இப்பொழுது வந்த இருவரும் யாவர்? அவர்கள் செய்துள்ள நற்கருமங்கள் எவை? அவர்களை நீ கனப்படுத்திய காரணம் யாது? இவற்றை யறியவிரும்புகின்றேன். தேவர்களாலே யெல்லாம் பூசிக்கப்படும் உன்னாற் பூசிக்கப்பட்டவர்கள் யாவர்? எனக்கேட்க, இயமதருமன் சொல்லலாயினன்.

பூலோகத்தில் வைதிகமென்னும் பட்டணத்தில் தராபாலனென்னும் அரசன் சிறந்து விளங்கினன். அந்தச் சமயத்தில் பார்வதி தேவியார் தமக்கு அபசாரஞ்செய்த ஓர் தோழியைப் பன்னிரண்டு வருஷம் நரியாய்த் திரியும்படி சபித்து விதஸ்தா வேத்திரவதி யென்னும் நதிகளின் சங்கம க்ஷேத்திரத்தில் உன்சாபமொழி

கவென்றும் சாபநுக்கிரகமுஞ் செய்தனர். அதனால் அத்தோழி நரிவடி வேற்று உலகத்தில் பன்னிரண்டு வருஷஞ் சஞ்சரித்து ஒரு காலத்தில் விதஸ்தா வேத்திரவதி நதிகளின் சங்கமஸ்தானத்தை யடைந்து, ஆங்கு ஆகாரங்கிடைக்காது உயிர் நீங்கித் திவ்வியமான சரீரத்தை வகித்து விமானத்திலேறிச் சிவசந்நதியடைந்து பண்டைய பணிவிடையிலிருந்தனள். அதனை யச்சமயத் தருகிருந்து கண்டதராபாலனென்னும் மன்னவன் ஆ! ஆ! அந்நரி வுயிர்விட்டவுடனே திவ்வியவிமானமேறிப் பரகதியடைந்ததன்றோ? இஃதுத்தம க்ஷேத்திரமென்று கருதி அங்கேயோர் சிவாலயங் கட்டுவித்து அதிற் சிவலிங்கப்பிரதிஷ்டைசெய்து பரிவார தேவர்களையு நிறுத்தி, திவ்வியமான மண்டப கோபுரபிரகார முதலியனயாவுமுடித்து யாவரும் பூசித்துப் பணியச்செய்தனன். இவ்வாறிருக்கையில், புராணேதிகாசங்களை நன்றாகக் கற்றுப்பிறருக் குரைத்து, பிரமஞானமுற்ற முனிசிரேஷ்டனான ஓர் வேதியன் வர, அவனைப் பூசித்து அவன்பாலிருந்த புஸ்தகத்தையும் கந்த புஷ்ப தூபதீபங்களால் முறைப்படி பூசித்து, வினயத்துடன் அப்பிராமணனை நோக்கி, யான் சிவாலயமொன்று இங்குக் கட்டுவித்தேன். அச்சிவ சந்நிதியிற் புராண சிரவணஞ் செய்யவேண்டுமென்று கருதிய நாற்குலத்தவர்களுங் கேட்கும்படி புராணஞ் சொல்லவேண்டும். நீர் புராணஞ் சொல்லுகையில் வருஷமொன்றிற்கு நூறு பொன் * நிஷ்கம் ஜீவனத்திற்காகக் கொடுத்துவருகிறேன். உமக்கும் இது நல்ல வுத்தியோகமாமென்று கூறி அவரைச் சம்மதிப்பித்துப் புராணஞ் சொல்லுவிக்க ஆரம்பிப்பித்து ஆறுமாதம் ஊராருடன் புராண சிரவணஞ்செய்து தன் ஆயுள் முடிந்ததால் அரசன் காலகதியாயினன். அப்பொழுதே சிவகடாக்ஷத்தால் திவ்வியமான விமானத்தைக் கொண்டுபோய் அழைத்துக்கொண்டுவந்தேன். இது இவனுடைய சுககர்மபலன். இது புண்ணியசரிதம். புராண சிரவணஞ் செய்வதால் சகலதேவர்களுக்குந் திருப்தியுண்டாவதுபோல, கந்தபுஷ்பாதி உபகரணங்களாற் செய்த பூஜையாலும், கோதானம் சொர்ணதானம் வெள்ளிதானம் வஸ்திரதானம் முதலியவற்றின் தானத்தாலுந் திருப்தியுண்டாகமாட்டாது. தர்மங்களைச் சொல்லும் புராண சிரவணத்தாலேயே தேவர்கள் பிரீதியடைவார்கள். புராணேதிகாச சிரவணத்தால் யானும் அதிக சந்தோஷமடைகி

---

* நிஷ்கம் - ஓர் நாணயம். இது சுமார் மூன்று உளுந்தினெடையுள்ளது.

றேன். அதனையே யானும் புகழ்வேன். இவன் இவ்வாறு புராண சிரவணஞ்செய்த நரசிரேஷ்டன், சத்சாவகாசத்தால் தர்மபுத்தி யுண்டாகி, தர்மங்களையெல்லாம் நன்குணரப் புராணசிரவணஞ் செய்யவேண்டுமென்னும் இச்சையால், சிரத்தை பக்திகளுடன் கூடிப் புராணஞ்சொல்லச்செய்து சிரவணஞ்செய்து விசேஷமான பக்தியடைந்தனன். ஆதலின் மாநுடன் புராணஞ்சொல்லும் பெரியோரிடஞ்சென்று பிரதக்ஷிண நமஸ்காரஞ்செய்து உலோபாதிகளின்றி, சுவர்ணத்தைத் தக்ஷிணையாகக் கொடுத்தால், சாசுவதமாகப் பிரமபதவியை யடைவான். இரண்டாவது விமானத்தில் வந்தவனும் இதேசத்கருமஞ் செய்தவனன்றிப பிறிதொன்று செய்தவனல்லன். இவன் புராணிகனுக்கு விசேஷமான பூசைசெய்துள்ளானாதலின் அதனைக்கருதியே யான் இவனையும் பூசித்தேன். புராணஞ்சொல்பவனைப் பூசித்தலால் யானும் பிரம விஷ்ணு ருத்திரர்களும் பூசிக்கப்பட்டவர்களாவோம். சிரார்த்தாதிகாலங்களில் உத்தமமானபக்ஷிய போஜனங்களுடன் ஒருமுறை பூஜைசெய்கின்றவர்கள் என்னைப் பதினைந்து வருஷங்கள் பூசித்தபலனை யடைவார்கள். புராணப் பிரசங்கியை ஒருமுறை திருப்திசெய்தபக்ஷத்தில் அநேகவருஷங்கள் யான் திருப்தியடைவேன். யான்மட்டுமன்றி, இந்திராதி சகலதேவர்களும் பிரமவிஷ்ணு சிவாதிகளுந் திருப்தியடைவார்கள். புராணப்பிரசங்கி சந்தோஷிப்பானாயின் சமஸ்த தேவர்களும் திரிமூர்த்திகளும் சந்திர சூரியர்களும் கிரகங்களும் சந்தோஷிப்பார்கள். ஸ்நானம் பூஜை ஜபம் ஹோமம் சாஸ்திரம் சவுசம் அஹிம்ஸை விரதாசரணம் உபவாசம் தைரியம் மௌன விரதம் இந்திரியநிக்கிரகம் பிரமஞானம் குரோதமின்மை தானம் க்ஷாந்தி தயை தவம் வாவி கூப தடாகங்களின் பிரதிஷ்டை சாந்திராயணம் யாகங்கள் தீர்த்தங்கள் ஆச்சிரமங்கள் முதலியனவெல்லாம் தர்மசாதனத்திற்காகவே யிருக்கின்றனவென்று பெரியோர் கூறுவார். தர்மத்தாலேயே பொருளும் காமமும் மோக்ஷமும் உளவாகும். சதுர்வித புருஷார்த்தங்களாலேயே இகபரங்களில் நிரந்தரசுகமுண்டாகும். பாவத்தால் துக்கமுண்டாகுமாதலின் பாவத்தைச்செய்யாமல் தர்மத்தை யாச்சிரயித்துப் புண்ணிய கருமங்களையே செய்யவேண்டியது.

அவ்வகைய கருமமும் ஸத்வமயம் ரஜோமயம் தமோமயமென முத்திறப்படும். சத்வமயமான கருமம் தவத்தால் பிரம

ஞானமடைந்த முனிவர் சித்தர்களிடத்தில் எப்பொழுதும் நித்திய மாகவிருக்கும். ரஜோமயமான தருமம் தேவர்களிடத்தி லிருக் கும். தமோமயமான தருமம் தானவதைத்தியரிடமிருக்கும். பரி சுத்தமான இவர்களுடைய சத்கருமம் சொல்லப்பட்டது. இது சத்தியம். அத்திவ்வியபுருஷர்களிருவரும் மகாபுண்ணியர்கள். அவர்களுடைய சரிதத்தை நீ கேட்டனையாதலின் நீ புண்ணிய புருஷனென்பதிற் சந்தேகமில்லை. இயமன் கூறியவை யாவும் சத் தியமென்று யாவரும் நம்பவேண்டும். புத்திரனே! எனக்கு ஐந் தாவது முகமொன்றிருந்தது. அம்முகத்திலிருந்தே புராணங்கள் பலவிதமாக வெளிப்பட்டு உலகத்திற்கு இதத்தைச் செய்கின்றன. புராணங்கள் எனக்குப் பிரீதிகரமானவை. வேதவேதாங்கங்களும் எனக்குப் புராணங்கள் போலப் பிரீதிகரமானவை யன்று. இப் புராணேதிகாசங்களைச் சிரத்தை பக்திகளுடன் புராணிகனுக்குச் சிவனுபாய விருத்தியை யுண்டுசெய்து, எப்பொழுதுஞ் சிரவணஞ் செய்வோர் உத்தமமான கதியை யடைவார்கள். தர்மார்த்தகாம மோக்ஷங்களைப் பூலோகத்தில் நன்றாக விளக்குவதற்காகவே புரா ணேதிகாசங்கள் எல்லாவற்றையுஞ் சொன்னேன். இவை வேதார்த் தத்தை விஸ்தீரணமாகச் சொல்லத்தக்கவை. சுலபபாண்டித்திய முடையவர்கள் வேதார்த்தத்தையுணரா ராகையின் அவர்களும் நன்குணருமாறு விஸ்திரணமான புராணேதிகாசங்களைச் சொன் னேன். தர்மப்பிரதிபாதகமான இவ்வகைய புராணேதிகாசங்க ளைச் சிரவணஞ்செய்பவனும் பக்தியோடு பாராயணஞ்செய்பவ னும் உத்கிருஷ்டமான ஸ்தானத்தை யடைவார்கள். புராணசிர வணகாலத்தில் தக்ஷிணைகொடுத்துக் கேட்கும்பக்ஷத்தில் பரமார்த்த ஸ்வரூபத்தில் ஐக்கியமாகின்றான். இஃதொரு ஆச்சரியமல்ல. பாத்திரனுக்குத் தானஞ்செய்தபக்ஷத்தில் அவனுக்கு யாவுங் கை கூடும். தீர்த்தங்களில் கேதாரம், விரதங்களில் மஹாவிரதம், பர்வ தங்களில் மேரு, பக்ஷிகளிற் கருடன், நதிகளிற் கங்கை, தேவர்க ளிற் சர்வேசுவரனாகிய சிவபெருமான், பாத்திரங்களில் வாசகன் [புராணிகன்] சிரேஷ்டமாம். இவ்விஷயத்திற் சிறிதுஞ் சந்தேக மில்லை. புராணஞ்சொல்லுகையில் பக்தியோடு பூசைசெய்தவன் சகலதேவர்களையும் பூஜைசெய்தவனாவான். புராணபாராயணம் சிரவணஞ்செய்தவர்கள் பெறும் புண்ணியம் ஆச்சரியம். விசேஷ மான தானங்கொடுத்துச் சிரவணஞ்செய்தவனுடைய பலன் இன்

னும் விசேஷமானது. நாடோறும் பக்தி சிரத்தையோடு சிவசந்நிதானத்திலிருந்து சிரவணஞ் செய்தவன் சிவசாயுச்சியத்தை யடைவதிற் சிறிதும் ஐயமில்லை. இது சத்தியம் என்று கூறியருளினர்.

ஈக்காடு - இரத்தினவேலுமுதலியார்.

---

## ஆத்மாவும் பரமாத்மாவும் ஒன்ருகுமா.

ஆத்மாக்கள் உண்மைஞானம் பெற்று உய்யும் வண்ணம் எல்லாம் வல்ல இறைவனல் அருளிச்செய்யப்பட்ட பதினெண் வித்தைகளுள் வேதமே மிகச்சிறந்தது. வேதப்பிரமாணத்தை மறுப்பவர் வேதவழி நின்று ஒழுகுபவருள் ஒருவருமே கிடையாது. அவ்வேதமானது ஆத்ம சப்தத்தை விளக்கவெழுந்த அவசரத்து சிலவிடத்தில் ஒன்றென்றும் சிலவிடத்தில் பலவென்றுங் கூறுகின்றது. அவ்வாறு கூறுவதால் ஆத்மா ஒன்றேயென்பது சிலருடைய கொள்கை. அவர்களே ஏகாத்மவாதிகள். ஆத்மா அளவில்லாதன வென்பது மற்றொருசாரார் கொள்கை. அவர்களே சைவராதியோர். ஏகாத்மவாதிகளுக்கு உண்மையில் ஆத்மாவைவிட கடவுளென்பதொரு பொருளில்லை. அருளில்லை ஆணவமில்லை, மாயையில்லை கன்மமில்லை. ஒன்றுமேயில்லை. யாவும் கற்பிதம். ஆனல் வியவகாரதசையில் மாத்திரம் இவை யாவும் உண்மையாகுமென அவர் வாதிப்பர். அவ்வாறு செய்யும் வாதத்துக்குத் தமக்கடுத்தனவாகிய சமயநூல்களை விரித்து அநுமானமுதலிய பிரமாணங்களுக்கேற்கப் பேசுவார்கள். அவர்கள் வார்த்தையனைத்தும் ஒந்தித் தலையெடுப்பாய் நசுக்கப்பட்டுப்போமாறு ஈண்டு பிரபல சுருதிப்பிரமாணங்களை வரைவாம்.

சாமவேதத்துள்ள மைத்திராயண்யோபநிஷத்தானது "இனி எவன் சரீரமென்று சொல்லப்பட்டானே அவனே பூதாத்மாவென்றுஞ் சொல்லப்பட்டான். அவனுக்கு ஒராத்மா உண்டு. அவன் தாமரையிலையின் நீர்போலுள்ளவன் அவன் பிரகிருதி குணங்களாற் கட்டுண்டு தன்னிலைமாறி மூடனயிருக்கின்ருன். மூடனய்ப்போன படியால் ஆத்மாவினிடத்துள்ளவனும், பிரபுவும், பகவானுமான பிரேரகனைக் காணவில்லை." எனச் சரீர இயல்பினையும், ஆத்ம

பரமாத்ம வியல்பினையும் யாவருக்குந் தெளிவுண்டாக எடுத்து விளக்கிற்று. இதனாலே திரிபதார்த்தவுண்மை சாதிக்கப்பட்டவா றறிக.

இங்கு ஆத்மாவைத் தாமரையிலையின் நீர்போலுள்ளவன் என உவமை முகத்தாற் கூறினமையால் பிரகிருதி குணங்களாற் கட்டுண்டு தன்னிலை மாறினவனும், மூடனுமாய்ப் போனவனுமான ஆத்மா ஜீவாத்மா என்றும், ஆத்மாவினிடத்துள்ளவனும், பிரபுவும், பகவானும், பிரேரகனுமானவன் வேறுபட்ட விசேஷ விலக்கணங்களாற் சொல்லப்பட்ட பரமாத்மாவென்றும் விளக்கியதாயிற்று. அன்றியும் ஆத்மா பரமாத்மாவைக் காணவில்லையென்று புகன்றபடியால் ஆத்மா உபாதியுறும் பொருளென்றும், பரமாத்மா ஞானானந்த வஸ்துவாய் விளங்கும் பரம்பொருளென்றும் நிர்ணயித்ததாயிற்று.

இக்கருத்தைத் தழுவிய பிரபல உபநிஷத்துக்களின் பிரமாணங்களை அடியில் காட்டுவாம்:—

த்வாசுபர்ணு ஸயுஜா ஸகாயா - ஸமானம் வ்ருக்ஷம் பரிஷஸ்வஜாதெ
தயோரந்ய: பிப்பலம் ஸ்வாத்வத்தி - யநஸ்நநந்யோ அபிசாகசீதி.

(முண்டகம் - சுவேதாசுவதரம்)

(தொடரும்.)

சோளங்கிபுரம் - சிவஅருணகிரிமுதலியார்.

---

## ஆயுள் சந்தா.

தென் ஆப்பிரிக்கா புலோவேயோவிலிருக்கும் சென்னைச் சிவனடியார் திருக்கூட்டத்துக் கிளைச்சபையினராகிய மெஸ்ஸர்ஸ் முதலி அண்டு நாயுடு அவர்கள் அன்புகூர்ந்து கீழ்குறித்த இருவரை ஆயுள் சந்தாதாரர்களாகச் சேர்த்து 2 பவுன் 6 ஷில்லிங் அனுப்பப் பெற்றோம்.

Mr. N. S. Saminatha Mudaliar,
67, Araya Street, Koranad:

Mr. Virasola Nadar,
c/o K. Perumalsamy Nadar,
Alleppy, (Travancore Estate.)